தினமலர்

# முதுநிலை செவிலியர் படிப்பு ஜிப்மரில் விண்ணப்பிக்கலாம்

புதுச்சேரி, மே 28–

ஜிப்மரில் முதுநிலை செவிலியர் படிப்புகளுக்கு விண்ணப்பங்கள் ஆன் லைனில் வரவேற்கப்படுகிறது.

ஜிப்மரில் எம்.எஸ்சி., எம்.பி.எச்., பி.பி.டி., பி.ஜி.டி., பி.ஜி.எப்., உள்ளிட்ட முதுநிலை நர்சிங் படிப்புகளுக்கு கடந்த 23ம் தேதி www.jipmer.edu.in என்ற இணையதளத்தில் விண்ணப்பங்கள் வரவேற்கப்பட்டு வருகிறது. வரும் 20ம் தேதி மாலை 4:30 மணிவரை விண்ணப்பிக்கலாம்.

நுழைவு தேர்வு ஜூலை 7ம் தேதி காலை 9:00 மணி முதல் 10.30 மணி நடக்கின்றது. இதற்கான ஹால்டிக்கெட்களை ஜூன் 29ம் தேதி டவுன்லோடு செய்து கொள்ளலாம்.

**எவ்வளவு சீட்:**

மெடிக்கல் பையோ கெமிஸ்ட்ரி– 4; எம்.எல்.டி., மைக்ரோபையாலஜி– 5; எம்.எல்.டி., பேத்தாலஜி–5; மெடிக்கல் பேத்தாலஜி–5; பையோஸ்டேட்டஸ்டிக்ஸ்–2; நியூரோடெக்னாலஜி–2.

குழந்தை பராமரிப்பு–5; சமுதாய சுகாதார செவிலியர்–5; சர்ஜிக்கல் நர்சிங்–5; கிரிட்டிக்கல் கேர் நர்சிங்–5; கார்டியோ தொரோசிக் நர்சிங்–3; நெப்ரோலஜி நர்சிங்–5; சைக்காட்ரிக் நர்சிங்–5; மகப்பேறு நர்சிங்–5; எம்.பி.எச்.,–34; பி.பி.டி–19; சீட்டுகள் உள்ளன.

தினகரன்
மே 28, 2024 செவ்வாய்க்கிழமை

# ஜிப்மரில் எம்எஸ்சி நர்சிங் உள்ளிட்ட மருத்துவம் சார்ந்த முதுநிலை படிப்புகளுக்கு விண்ணப்பம் வரவேற்பு

புதுச்சேரி, மே 28: ஜிப்மரில் எம்எஸ்சி நர்சிங், அலைடு ஹெல்த் சயின்ஸ் உள்ளிட்ட மருத்துவம் சார்ந்த முதுநிலை படிப்புகளுக்கு ஆன்லைன் வழியாக விண்ணப்பங்கள் வரவேற்கப்பட்டுள்ளது.

புதுச்சேரி கோரிமேட்டில் உள்ள ஜிப்மரில் எம்.எஸ்.சி அலைடு ஹெல்த் சயின்ஸ்-23, எம்.எஸ்.சி. நர்சிங்-31, எம்பிஎச் (மாஸ்டர் ஆப் பப்ளிக் ஹெல்த்)-34, பிபிடிஎன் (போஸ்ட் பேசிக் டிப்ளமோ இன் நர்சிங்)-19, இதர பட்டமேற்படிப்பு பாடப்பிரிவுகள்-12, எம்பிஐபி (மெடிக்கல் பிசிக்ஸ் இன்டர்ன்ஷிப் புரோக்ராம்)-4 என மொத்தம் 121 இடங்கள் உள்ளன. இந்த இடங்களுக்கான மாணவர் சேர்க்கை ஆண்டுதோறும் ஆன்லைன் முறையில் நுழைவுத்தேர்வு நடத்தி நிரப்பப்படுகிறது. அந்த வகையில் 2024-25ம் கல்வி ஆண்டுக்கான மேற்கூறிய பாடப்பிரிவுகளுக்கு நுழைவுத்தேர்வு வருகிற ஜூலை 7ம் தேதி நடக்கிறது. இந்த பாடப்பிரிவுகளுக்கு வருகிற ஜூன் 20ம் தேதி மாலை 4.30 மணி வரை www.jipmer.edu.in என்ற ஜிப்மர் இணையதளத்தில் மாணவர்கள் விண்ணப்பிக்கலாம்.

நுழைவுத்தேர்வுக்கான ஹால்-டிக்கெட்டை வருகிற ஜூன் 29ம் தேதி காலை 11 மணி முதல் ஜூலை 7ம் தேதி காலை 8 மணி வரை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். இப்பாடப்பிரிவுகளுக்கான நுழைவுத்தேர்வு பெங்களூரு, புவனேஸ்வர், சென்னை, ஹைதராபாத், கொச்சின், கொல்கத்தா, மும்பை, டெல்லி, புதுச்சேரி ஆகிய 9 நகரங்களில் ஜூலை 7ம் தேதி காலை 9 மணி முதல் 10.30 மணி வரை நடைபெறும். தேர்வு முடிவு ஜூலை 22ம் தேதிக்கு முன்பாக வெளியிடப்படும். கலந்தாய்வுக்கான தேதிகள் பின்னர் தெரிவிக்கப்படும் என ஜிப்மர் தகவல் சிற்றேட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.